1972 மார்ச் 23]

இராணிப்பேட்டைக்கு மகளிர்க் கல்லூரி.

வினு 644 .—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

இராணிப்பேட்டையில் பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, வாலாஜாபேட்டையில் அறிஞு அண்ணு பெண்கள் கல்லூரி இருக்கிறது. அது இன்னும் விரிவுபடுத்தப் படாமல் அங்கே படிக்கிற மாணவிகளுக்கு ஹாஸ்டல் வசதிகூட இல்லாமல் இருக்கிறது. அதை விரிவு படுத்தும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே இராணிப்பேட்டைக்குப் பக்கத்திலே உள்ள வாலாஜாபேட்டையில் பெண்கள் கல்லூரி இருக்கிற காரணத்தால், அதை விரிவுபடுத்தப்படவேண்டும். அதனுடைய மாணவிகளுக்கு விடுதி கட்டடம் கட்டவேண்டுமென்பதற்கான முயற்சியை கல்லூரிக் கல்வி இயக்குநர் மேற்கொண்டிருக்கிருர். அவருடைய ஆய்வில் அது இருக்கிறது. அவரிடமிருந்து செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வந்ததற்குப் பிறகு அந்த நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம்

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஜனதொகை மக்கள் எண்ணத்தில் ஆண்களைப் போல் பெண்களும் இருக்கிருர்கள். ஆகவே கல்லூரிகளைப் பொறுத்த வரையில் ஆண்கள் கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. ஆண்களுக்கு இருக்கும் வசதிக்கேற்ப பெண்களுக்கு இல்லாமல் இருக்கும் நிலை இருப்பதால், மகளிர் கல்லூரி அதிகமாகத் திறக்க அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்கள் அளவுக்கு பெண்களின் எண்ணிக்கை இருந்தாலும்கூட படிப்பவர்களின் தன்மையைப் பொறுத்து கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன. பெண்களின் தேவைக் கேற்ப, படிக்க வருகிறவர்களின் தேவைக்கேற்ப ஆங்காங்கு உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 100-க்கு 100 சமமாக படிக்கிற நிலை வருகிறபோது இதைச் செய்யலாம். இப்போது 100-க்கு 55 பேர்தான் ஆண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவும், 100-க்கு 27 பேர்தான் பெண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிருர்கள். ஆகவே இப்போதைக்கு இந்த முயற்சி மேற்கொள்ளப் படவேண்டியதில்லை.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் பெண்களும், ஆண்களும் ஒரே கல்லூரியில் படிக்க வைப்பதற்கான கொள்கையை அவர்கள் ஆதரிக்கவில்லை. இப்போது இருக்கும் நிலையில் பெண்கள் அதிகமாக படிக்கும் சூழ்நிலை இருப்பதால், ஆண்களோடு பெண்களையும் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவிட அரசு ஏதேனும் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த அரசைப் பொறுத்த வரையில் அந்தக் கொள்கையைத்தான் கொண்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தையும், மதுரைப் பல்கலைக்கழகத்தையும் பொறுத்தவரையில் இந்த முடிவை எடுத்தால் ஒரே கல்லூரி மட்டும் இருக்கிற இடத்தில் இந்தப் பிரச்னை தீரும் என்ற வகையிலும் பெண்கள் கல்லூரி என்று தனியாக இருப்பது இருக்கட்டும், அங்கே போய் படிக்கிறவர்கள் படிக்கட்டும். ஒரே கல்லூரி இருக்கிற இடத்தில் மட்டும் இத்தகைய முறை கையாளப்படவேண்டுமென்ற கருத்தை அரசு வலியுறுத்திக்கொண்டு வருகிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, வாலாஜாபேட்டை பெண்கள் கல்லூரி வேலூருக்கு வெகு தொலைவில் இருப்பதால், பெண்களின் பெற்றோர்கள் அதை வேலூருக்கு மாற்றவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களா ? அப்படி வேண்டுகோள் வந்தால், அரசு அந்தப் பெண்கள் கல்லூரியை மாவட்ட தலைநகரான வேலூருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேலூர் நகரிலேயே தனியாக ஒரு பெண்கள் கல்லூரி அமைக்கவேண்டுமென்ற முயற்சியை தனியார் துறையில் இருக்கிற ஒருவர் மேற்கொண்டு இருக்கிறார். பல்கலைக்கழகத்தின் அனுமதியை அதற்காகக் கோரியிருக்கிறார்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மதுரைப் பல்கலைக்கழகம் ஒரே கல்லூரி இருக்கும் இடங்களில் ஆண்களையும் பெண்களையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டால் பிரச்னை தீரும் என்று. தமிழ்நாடு முழுவதும் 'கோ-எசுகேஷன்' தான் இருக்கவேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டுவர அரசு முன் வருமா ? அதன் மூலம் எல்லாப் பிரச்னையும் தீர்ந்துவிடும் என்பதையும் அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஒரு சட்டம் போடவேண்டிய அவசியம் இல்லை. ஒரே ஒரு கல்லூரி இருக்கிற இடத்தில் இரு பாலாரையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் பெற்றோர்களுக்கு இருக்கும் சங்கடம் இல்லாமல் போகும் என்பதற்காகத்தான் இத்தகைய முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Buildings for village schools

* 645 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Government have proposed to raise loans from the Life Insurance Corporation to construct buildings for village schools; and

(b) if so, the details thereof?